# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழில் உள்ள முதலெழுத்துகளின் எண்ணிக்கை

_______________________

(216, 30, 18)

2. பகைவர் செருக்கை அழிக்கும் கருவி என்று குறள் கூறுவது

_______________________.

(படை, செல்வம் கொடை)

3. யாதும் ஊரே யாவரும் _______________________.

(கேளிர், கேலிர், கேழிர்)

4. சிங்கம் முழங்கும். அதுபோல ஆந்தை _______________________.

(கத்தும், கதறும், அலறும்)

5. நான் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றதால்

_______________________ படம் நாளிதழில் வெளிவந்தது.

(எமது, எனது, உனது)

6. கல் + குகை என்பதைச் சேர்த்து எழுதினால்

(கல்க்குகை, கல்குகை, கற்குகை)

7. தைப்பொங்கலை _______________________ என்றும் கூறுவர்.

(உழவர்திருநாள், மாட்டுப்பொங்கல், பட்டிப்பொங்கல்)

8. முக்கனிகள் _______________________.

(மாதுளை விளா பலா, வாழை மாதுளை விளா, மா பலா வாழை)

9. வைகறை என்பதன் பொருள் ______________________.

(காலை, அதிகாலை, பகல்)

10. கண்பார்வை இழந்தவரும் கண்டுணரும் கலை ______________________.

(சிற்பம், ஓவியம், நடனம்)

11. வேறொரு நாட்டிலிருந்து இந்நாட்டிற்குள் பொருட்களைக் கொண்டுவருவது ______________________.

(ஏற்றுமதி, பெறுமதி, இறக்குமதி)

12. ஆடற்குல ஆண்களை ______________________ என அழைப்பர்.

(பாணர், கூத்தர், விறலியர்)

13. பூம்புகார்ப் பொற்றொடி என்று குறிப்பிடப்படுபவள் ______________________.

(மாதவி, கண்ணகி, மணிமேகலை)

14. மாமல்லன் என்று அழைக்கப்பட்டவன் ______________________.

(மகேந்திரபல்லவன், நரேந்திரபல்லவன், நரசிம்மபல்லவன்)

15. கடலும் கடல் சார்ந்த இடமும் ______________________.

(நெய்தல், குறிஞ்சி, முல்லை)

16. முட்செடி என்பதைப் பிரித்து எழுதினால் ______________________.

(முட் + செடி, முள் + செடி, முட்ச் + செடி)

17. தன் இனத்தை அழைத்துக் கூடி உண்ணும் பறவை ______________.

(குயில், மயில், காகம்)

18. நகுதல் என்ற சொல்லின் பொருள் ______________.

(அழுதல், சிரித்தல், நடுங்குதல்)

19. கரையில்லாதது என நாலடியார் கூறுவது ______________.

(கல்வி, செல்வம், வீரம்)

20. நாடுபடு செல்வங்களுள் ஒன்று ______________.

(யானைமருப்பு, தேன், அரிசி)

21. செண்பகம் ______________ நிலத்துக்குரிய பறவை.

(முல்லை, குறிஞ்சி, நெய்தல்)

22. எறும்பு ஒரு ______________.

(சிற்றுயிரி, கடலுயிரி, ஈரூடக உயிரி)

23. பழந்தமிழர் பண்பாடு, வரலாறு, கலைகள் எனபவற்றைக் கூறும் நூல் ______________.

(திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம்)

24. நேற்று வாணி நடனம் ______________.

(ஆடினாள், ஆடுகின்றாள், ஆடுவாள்)

25. மழை வெள்ளம் வாய்க்கால் வழியாகச் ______________ என்று ஓடியது.

(கடகட, சலசல, படபட)

26. மூவேந்தர்களில் ______________________ கொடி புலிக்கொடியாகும்.

(பாண்டியரது, சோழரது, சேரரது)

27. சுடர் விளக்கானாலும் ______________________ வேண்டும்.

(ஊன்றுகோல், தூண்றுகோல், தூண்டுகோல்)

28. ஒலிம்பிக் போட்டியைத் தொடக்கி வைத்த நாடு

______________________.

(இத்தாலி, கிரேக்கம், போலந்து)

29. ஆறு கடலில் கலக்கும் இடம் ______________________.

(ஆற்றங்கரை, கழிமுகம், குடாக்கடல்)

30. நாம் சுவாசிக்க உதவுவது ______________________.

(வளி, வழி, வலி)

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

இனிய வைகறைப் பொழுது. கிழக்கு வெளுத்து வருகிறது. சேவல்கள் கூவுகின்றன. காகங்கள் கரைகின்றன. மலர்கள் மொட்டவிழ்ந்து மலர்கின்றன. மலர்மணம் வீசும் தென்றல் வீசுகிறது. மக்கள் துயிலெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சுறுசுறுப்பாக இயங்குகின்றனர். வீட்டு முற்றங்கள் தோறும் பெண்கள் கோலம் போடுகின்றனர். இந்த இனிய காலையில் ஏன் இந்த ஆரவாரம்? இன்று தைப்பொங்கல் திருநாள். தமிழரின் புத்தாண்டுப் பிறப்பு.

1. இங்கு வந்துள்ள திக்கின் பெயர் என்ன?

______________________________________________

______________________________________________

2. சேவல்கள் என்ன செய்கின்றன?

______________________________________________

______________________________________________

3. மக்கள் எவ்வாறு இயங்குகின்றனர்?

______________________________________________

______________________________________________

4. பெண்கள் என்ன செய்கின்றனர்?

______________________________________________

______________________________________________

5. ஏன் மக்கள் ஆரவாரப்படுகின்றனர்?

______________________________________________

புள்ளிகள் 10

3) **கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| அள்ளஅள்ள | நறநற | நல்லநல்ல |
|---|---|---|

| அக்கம்பக்கம் | அல்லும்பகலும் |
|---|---|

1. கோதை ______________________ அயராது உழைத்தாள்.

2. ______________________ பிள்ளைகளை நம்பி நாடு இருக்கிறது.

3. அப்பா சினத்தால் பற்களை ______________________ என்று கடித்தார்.

4. ஆற்றுநீர் ______________________க் குறையாது.

5. நாம் ______________________ பார்த்து வீதியைக் கடக்க வேண்டும்.

புள்ளிகள் 10

**4) பாடநூல் வினா ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சிற்பக்காடு என்று அழைக்கப்பட்ட ஊர் எது?

2. ஆடற்கலைகளின் இருபிரிவுகளும் எவை?

3. ஆனைந்தும் எவை?

4. ஒலிம்பிக் போட்டிகளின் முத்திற நோக்கங்களும் எவை?

5. மன்னாரில் துறைமுகம் இருந்த இடத்தின் பெயர் என்ன?

6. நெய்தல் நில மக்களின் தொழில்கள் எவை?

7. தமிழரது அறநூல்களில் சிறந்தது எது?

புள்ளிகள் 10

5) **பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

*வாசல் தோறும் மாக்கோலம்*
*வகைவகையான பூக்கோலம்*
*வாசல் தேடி வருபவரை*
*வரவேற்கும் இக் கோலம்*

*விரல்கள் நடுவே நேராக*
*விழுகிற கோடுகள் மாக்கோலம்*
*வரையும் கோட்டில் எறும்புகளும்*
*வளைந்து புரள்வது தனி அழகு!*

*அரிசி உடைத்து மாவாக்கி*
*வண்ணக் கோலம் போடுவதேன்*
*சிறிய எறும்புகள் தின்றிடத்தான்*
*சிந்தையில் அன்பு வளர்ந்திடத்தான்.*

1. வாசல் தோறும் போடப்படுவது எது?

_______________________________________________

2. இங்கு வந்துள்ள இரண்டு கோலங்களின் பெயர்களைத் தருக.

_______________________________________________

3. கோலத்தின் மேல் வளைந்து புரள்வது எது?

_______________________________________________

4. எதை உடைத்து மாவாக்கப்படுகின்றது?

_______________________________________________

5. சிந்தையில் எது வளர்ந்திடும் எனக் கூறப்படுகின்றது?

_______________________________________________

புள்ளிகள் 10

6) **மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| வீட்டு | உலகெங்கும் | இயற்கை | வாழ்வோடு | பேண |

விலங்குகள் ______________________ கொடுத்த கொடையாகும். அவை மனித ______________________ மிகவும் தொடர்புடையனவாக இருக்கின்றன. விலங்குகளைக் காட்டு விலங்குகள் ______________________ விலங்குகள், நாட்டு விலங்குகள் எனப் பிரிக்கலாம். இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கு விலங்குகள் உதவுகின்றன. அதனால் அவற்றை நாம் ______________________ வேண்டும். மக்களைக் கவரும் விலங்குகள் ______________________ காணப்படுகின்றன.

புள்ளிகள் 10

## 7. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Paris ist eine sehr schöne Stadt. In seinem Zentrum befindet sich der Triumphbogen. Diesen ließ Napoleon errichten. Hier treffen zwölf Straßen aufeinander

Parijs is een mooie stad. In het hartje van de stad staat de 'Arc de Triomf' die is gebouwd door Napoleon. Er zijn 12 wegen verbonden met dit monument.

Parigi è una citta' molto bella.Al centro di esso c'è l'Arco di Trionfo costruito da Napoleone. In questo si incontrano dodici strade.

Paris er en smuk by. I midten af byen ligger Triumfbuen. Denne er opbygget af Napoleon. Der udgår 12 gader fra denne plads.

Paris är en vacker stad. I mitten av den finns en segerbåge (triumfbåge). Det är byggt av Napoleon. Där möts 12 gator.

Paris est une ville magnifique où se situe l'arc de triomphe. Il a été construit sur ordre de Napoléon. 12 avenue se joignent mutuellement

Paris is a very beautiful town. There is an arc of triumph at the centre of Paris. Nepolian had this built. There are twelve streets joining on to this arc.

Paris er et vakkert by. Den har en triumfbue i sentrum. Den ble bygd av Napoleon. Her møtes tolv veier.

புள்ளிகள் 05

8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து; 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி
- மூத்தோர் சொற் கேட்போம்
- நீர் கண்ட கனவு.

புள்ளிகள் 15